கம.



வி. எம். ஜிக்கிரியாசாயபு கேட்டுக்கொண்டபடியால்,

**சூளை - மாணிக்கநாயக ரவர்களால்,**

இயற்றப்பட்டு,

---

ஆப் இந்தியா பிரஸில்

ப்பட்டது.

1922. [அணா 1.

ஸ்டர் காப்பிரைட்.


OFFICE OF THE
20 FEB
MADRAS



N22
184426

உ

பரதமாத்தா துணே.

மண்டலத்து நேயர்கள் மகிழ்ந்துபோற்றும்

# மஹாத்மா காந்திபாட்டு,

## முதற்பாகம்.

20 FEB 1922

### விநாயகர்துதி வெண்பா.

மகாகாந்தி முனிவரைநம் மானிலத்தி லேபுகழ்ந்து
சுகாத்மா வெனச்சொல்லி சிந்தித்தார் யுகாகலியில்
பஜனே தமிழ் கீர்த்தனமாய் பாடிவர பாலகன்யான்
கஜமுக நின் கழல் தொழுதேன் கார்.

### அவையடக்கம்.

படமெடுத் தரவமாட பார்த்ததோர் சிறுமட்பூச்சு
[illegible]டன் ருனுமாடுந் திறமையை போலயானும்
மடமதியா லின்னூலை அரைந்தன னறிவின்மிக்கோர்
உடன்வரும் குற்றம்நீக்கி வுயர்குணங் கைகொள்வீரே.

---

### விநாயகர் துதி.

கோமளாங்கி யென்ற டிராமா வர்னமெட்டு.

இராகம்-நாட்டை-தாளம்-ஆதி.

பல்லவி.

கணநாதா இதுததி கணநாதா சிவ

அநுபல்லவி.

கணத்தில்வந்த குணத்தைக்கண்டு தினந்தொழும் கண

சரணம்.

1 மந்தமுடன் யான் மந்தமுடன் யென்னே
சொந்ததம்பி கந்தனேப்போற்வந்து காரும் கண

2 மாங்கனியை அன்று மாங்கனியை வோடி
யேங்கவேலன் வாக்கிநின்று வோங்கிவளர் கண

3 மாமுனிவர் காந்தி மாமுனிவர் மன
மகிழநீயும் புகழவாரும் ஜகமிதில் கண

4 பாலன்மாணிக்கம் சூளே பாலன்மாணிக்கம் கவியை
மேளத்தோடு த[illegible]ம்போட்டு கோலவரும் கண

ஆண்டிபண்டாரம் வர்னமெட்டு. பல்லவி.

உத்தமசன்யாசி நமக் குழைக்கும் சுதேசி காந்தி உத்தம

கண்ணிகள்.

1 பக்தியதை யித்தரையில் நித்தமுப தேசஞ்செய்து
சத்தியா கிரகநிலே சங்கமதிற் தங்கும்காந்தி உத்

2 சுத்த ஆகாரமதை நித்தரிவரருந்தி
சித்தரைப்போல் ஜகமுழுதும் சீர்திருத்தஞ்செய்தகாந்தி உத்

3 இந்துமஹ மதியர்களும் யிணைபிரியாதிருக்கும்படி
மந்திரங்க ளோதிக்கொண்டு தந்திரமாய்சுற்றும்காந்தி உத

4 ஏழை யெளியவர்க்கும் யெவ்வுயிரானவர்க்கும்
தாழவுரைத்துவரும் தர்மகுணநேசர் காந்தி உத்

5 வேந்தரிடம் பாரிஷ்டராய் வெகுநாளுழைத்தனராம்
சாந்தகுணம்வந்ததினால் கர்க்கார்தொழில்விட்டகாந்தி உத்

6 பம்பாய்கல்கத்தாசென்னை பெல்காம்பல்லாரிலண்டன்
தெம்பாய் மதுரைசில தேயமும்புகழுங்காந்தி உத்

7 பாலன்மாணிக்கம்சொன்ன பாடலதைபாரிலண்ணே
தாளம்தவரிடாமல் மேளங்கொட்டியாடிடுங்கள் உத்

---

அரசனில்லாதகாலம் அரிகுத்தவுங்கோலம் என்ற

ஞானசௌந்தரி வர்னமெட்டு.

கண்ணிகள்.

மாமுனிநல் வாக்கு
மதுபானத்தை நீக்கு
நாமினி சுகம்பெற யிதுவேநன்னடை
கடை தடை
செய்யவரும் போது
சேவிக்கலாகாது
வையகம்புகழுங்காந்தி மெய்யனவரிஷ்டம்
கஷ்டம் நஷ்டம்
வந்தபோது பாரு
வழிபடு மிவ்வூரு
இந்துசமுந்திக்குமேல் விந்தையைபெரும்
இரும் வரும்
எஸ் டி மாணிக்கம் பாட்டு
இருசெவியிலும் கேட்டு
சிஸ்டம்பேர்வழியைநீக்க செய்யும்சாதகம்
இதம் சுகம் மாமு

தமிழ்நாடு ... 184426

அடுக்குமல்லிகை தொடுக்குமெத்தையிலே என்றவர்னமெட்டு.

இ-ம்-செஞ்சுருட்டி-தாளம்-ஆதி.

கண்ணிகள்.

1 காந்தியின்குணஞ் சாந்தமாச்சுதே கருணைபெற்றுப
சாந்திசெய்யு மாந்தராச்சுதே இந்து
மதத்தையொற்றுமை படுத்தகற்றமெய்
பதத்திற்சித்தம்வை சுகத்தைநற்றிசெய் காந்தி

2 இஸ்ட்டாப்ரீக்காவி லேற்றிபுகழுதே இந்துஜனங்கள்
இவரேயீசனென மகிழுதே முறை
யிடுவார் குடியில் கெடுவார்முடிவில்
விடுவோரடியில் துடருமடியார் காந்தி

3 பகரும்பாம்பைநகரின்சண்டையிலே பரமாத்மாகாந்தி
பதமுறும் பர ஷியரண்டையிலே வந்து
பக்தியாய்நின்று வுத்தமனன்று
சத்தியமொன்று வைத்தாரேயின்று காந்தி

4 சாந்திசாந்தி சாந்தியென்றுரே சகலபேரும்
காந்திவந்தா ரென்றுநின்றுரே இனி
சாதமுண்ணேன் நீதஞ்சொன்னேன்
வேதம்யெண்ணேன் பாதம்பண்ணேன் காந்தி

5 சொன்னவுடனே மன்னர்கூடினுர் சுதேசிகூட்டம்
சூழ்ந்துமஹா முனியைதேடினுர் எங்கும்
சாதகம்பெற வோது மாணிக்கம்
நீதமிங்கிவர் மீதுபாடவே காந்தி

---

## உடுமலையின் முத்துசாமி பாட்டை என்ற வர்ணமெட்டு.

இ-ம்-பியாகு-தாளம்-ஆதி.

### கண்ணிகள்.

1 காந்தியின்கை ராட்டினத்தை வாங்கும் பஞ்சி
கண்டு நூலை செய்யகஷ்டம்நீங்கும் எங்கும்
காணக்கிடையாதஆடை நாணயமானநெசவு
நாமே—செய்ய லாமே

2 கனவா னவா மொழியை காணும் அன்பர்
கதருடையதரிக்க வேணும் நிதம்
காலைமாலை ராட்டினத்தை வேளைதவராமல்சுற்ற
சொன்னார்—நம கண்ணார்

3 பெண்டுகளும் கும்புகூடி வாது அங்கே
பேசவும்போகாதே முடியாது மஹான்
பெருத்தயோசனைசெய்சீர் திருத்தங்கள்செய்துவாரார்
நன்மை—இது வுண்மை

4 பாலர்பல தொழில்செய்யும்போது கெட்ட
பஞ்சம்நம தூரில்நெருங்காது இதை
பார்க்கும்பெரியோர்களெல்லாம் பாலரைகைதொழில் [செய்ய
விடுங்கள்—சுக படுங்கள்

5 கதருடையை தரிக்க நாணும் நேச
கனவான்களுக் கரிக்கைகாணும் நாம்
கையினாற்செய் தவுடையை கட்டிடுங்களென்றுவோத
வேணும்—பின்பு தோணும்

6 சிறுமணவூரு முனிசாமி அந்த
செல்வன்சீடன் மாணிக்கம்நேமி நல்ல
சர்க்கரைத்தேன் முக்கனிக்கும் மிக்கருசிக்கும் கவியை
தேடு—நிதம் பாடு

பத்திசாதிக்க விடாது என்ற வர்னமெட்டு.

இ-ம்-பியாகு-தாளம்-ஆதி.

பல்லவி.

காந்திமஹானிவரைப் போலே வூரில்
காணுவதுண்டோ யினி மேலே காந்

அநுபல்லவி.

சாந்தவதாரஞ்செய்து சங்கத்தலைவர்கட்கு
தேர்ந்தவிஷயங்களை தேடியெடுத்துரைக்கும் காந்

சரணங்கள்.

1 நிதமத விஷயங்கள் பேசி சங்கம்
நிலைதிருத்தினர் சுதேசி
பதமடைய செய்ததோர் நேசி இந்த
பாரில் பிரியவுப வாசி
சுதந்தரம்வேணுமென்று சொந்தமுயர்ச்சிகொண்டு
சோதமில்லா துழைத்து ஸ்ரீமான்பெயரும்பெற்ற காந்

2 காந்திமஹா னக்ஷரம் வோதி கலி
யுகத்தி லவர்பேர் பிரக் யாதி
இந்திய மக்களுக்கு நீதி வந்து
யெடுத்துரைத்திட்ட ஞாய வாதி
நம்தேய மக்களுக்கு நன்மையுண் டாக்குதற்கு
நல்லதவம்புரிந்து நாடெங்கினும் திரிந்த காந்

3 சூளை மாணிக்கம் சொல்லை கேட்டு அன்பர்
சீக்கிரம் ஜோபியில்கை போட்டு
காளையிவனுக்கொரு நோட்டு தந்து
கவியைபெற்றுநீ பாடி காட்டு
கலியுகத்தில்நமக்கு காக்ஷிகொடுப்பதற்கு
கர்த்தனவதரித்தார் காணும்பரமசித்தர் காந்

அம்பாள் மதுரைமீனாக்ஷி என்ற வர்னமெட்டு.

இ-ம்-தேசிகம்-தாளம்-ஆதி.

கண்ணிகள்.

1 காந்தி மஹாமுனிவர் மந்த்ரம் சொல்லி
கையிற்சுற்றுவீர் யந்த்ரம் நம்தேசம்
கடுகபெருஞ் சுதந்த்ரம் கவிஞர்க்கிது தந்த்ரம்
கவிஞர்க்கிது தந்த்ரம் கவிஞர்க்கிது தந்த்ரம் காந்

2 கனவா னவரறிக்கை சேதி நான்
கண்டு வுரைத்தேன் சோதி இந்துக்கள்
க்டைத்தேரவந்த வாதி கண்டோர்வெகுநீதி
கண்டோம் வெகுநீதி கண்டோம்வெகுநீதி காந்

3 ஒத்துமைபடுத்து மபிமானி நமக்காக
வுழைத்தார் நாணி சத்திய
விரத பசும்பொன்மேனி விலகிடாதஞானி
விலகிடாத ஞானி விலகிடாதஞானி காந்

4 படித்ததெல்லா மிந்துக்கள்வேதம் அதை
பார்த்துக்கொண்டு நீதம் நாடெங்கும்
பகர்ந்தமொழி ப்ரசாதம் பலத்தபிடிவாதம்
பலத்தபிடிவாதம் பலத்தபிடிவாதம் காந்

5 சென்னைவாழ் பரதநாடு சூளை
சிறுவன் கவியை தேடு மாணிக்கம்
செப்புங்கீதம் பாடு ஜெயமெனக்கொண்டாடு
ஜெயமெனக்கொண்டாடு ஜெயமெனக்கொண்டாடு காந்

---

சோமசேகரனருளும் பாலா வேலா என்றமெட்டு.

பல்லவி.

மகாகாந்தி மந்திரத்தை பாரு பாரு இந்து
மஹமதியர் சுகமடையும் சீரு சீரு முந்து மஹா

கண்ணிகள்.

1 ஜகமெலாந் துதிக்குதவர் பேரும் வூரும் சிவ
சங்கரனே வுற்றுநேரில் வாரும் பாரும் நம்
நகர்தனி லேவந்ததாக கூரும் நீரும் சொன்ன
ஞாயமரிந்து கவலே தீரும் சேரும் முந்துமஹா

2 சுதந்தரமெனும் விதையை நாட்டி நாட்டி மனந்
துணிந்தவரும் இந்தியரை கூட்டி கூட்டி வந்து
முதிர்ந்து நிறைந்ததேசபக்தி காட்டி காட்டி இந்த
மூவுலகம் தருகுராரே பேட்டி பேட்டி முந்து (ம)

3 சுத்தபக்தி நித்தம் நமக் கோதி வோதி இரு
செய்கையிற் பிரிந்திருந்த ஜாதி ஜாதி நம்மை
ஒத்துமையாய் செய்துவைத்தார் நீதிநீதி வந்து
வுலகம்செழிக்கவுழைக்கும்நமது வாதிவாதி முந்து (ம)

4 அன்னிய தேசச்சரக்கை நீக்கும்நீக்கும் குறை
வானமதுபாணமதை போக்கும்போக்கும் இது
நன்னடை மஹாத்மா திட்டம் நோக்கும் நோக்கும் சொல்லே
நம்பினேருக்கின்பமே வுண்டாக்கும்ஆக்கும்முந்துமகா

5 பாரத்த நன்னடு சாமான் வாங்கும் வாங்கும் பாரில்
பாலர் நாமும் பட்டதுன்பம் நீங்கும் நீங்கும் சொந்த
வூரெலாம்தொழிற்சாலேகள் ஓங்கும் ஓங்கும் இதை
வுணராவிடில் காந்திசாபம் தாங்கும் தாங்கும் முந்து (ம)

6 எங்கும்பெயர் பெற்றசென்னே நாடு நாடு அதர்க்
கடுத்தசூளே மானகரம் தேடு தேடு கண்டு
மங்களம் பெருகதாளம் போடு போடு எஸ்டி
மாணிக்க நாயகர்கவி பாடு பாடு முந்து (ம)

தில்தாரியாரி சைலம் என்ற வர்னமெட்டில் பின்முடுக்கு சந்தம்.

பல்லவி.

காந்திசாந்தி செய்கைக்கு ஜே
கங்காதர திலகர்க்கு ஜே. காந்தி

கண்ணிகள்.

1 வேந்திமாத்தாவுக்கு ஜே வீபின்சந்ரபாலர்க்கு ஜே
விதிதினக்கு ஜே-மதிவுனக்கு ஜே
பதிதனக்கு ஜே-அதிபனுக்கு ஜே காந்தி

2 சீயார்தாசருக்கு ஜே-சிரோஜனியம்மாளுக்கு ஜே
சிறியவர்க்கு ஜே-பெரியவர்க்கு ஜே
வுரியவர்க்கு ஜே-அறிபவர்க்கு ஜே காந்தி

3 தாதாபாய்.நௌரோஜிக்கு ஜே-தங்குந்திரு மூர்த்திக்கு ஜே
தாசருக்கு ஜே-யீசருக்கு ஜே
நேசருக்கு ஜே-காசதாக்கு ஜே காந்தி

4 லாலா லஜபதிக்கோர் ஜே-லண்டன்சங்க சபைக்கோர் ஜே
கிலாபத்துக்கு ஜே-ஆபத்துக்கு ஜே
கோபத்துக்கு ஜே-தீபத்துக்கு ஜே காந்தி

5 அல்லாஹு அக்பர்க்கு ஜே-அலிசகோதரர்க்கு ஜே
ஆண்டவர்க்கு ஜே-வேண்டினோர்க்கு ஜே
பாண்டவர்க்கு ஜே-காண்டிபர்க்கு ஜே காந்தி

6 இந்துமக மதியர்க்கு ஜே-இதையுணரு மன்பர்க்கு ஜே
இகத்துக்கும் ஜே-அகத்துக்கும் ஜே
யுகத்துக்கும் ஜே-சுகத்துக்கும் ஜே காந்தி

7 மாணிக்கம்நல் வாக்குக்கு ஜே-மண்டலங்கவிஞர்க்கு ஜே
மறைவுனக்கு ஜே-அறைந்தினக்கு ஜே
குறைகளுக்கு ஜே-யிறைவனுக்கு ஜே காந்தி

முதற்பாகம்-முற்றிற்று.

184476.

---

இப்புத்தகம் வேண்டியவர்கள் சூளை-மாணிக்க நாயகர்,
வெற்றிலைப்பாக்குக் கடை, நெ. 2, சூளை ஐரோட், மதராஸ்.
இரண்டாம்பாகம் அவசியம் பார்க்கவும்.